1983 பிப்ரவரி 8]

திருப்பூர் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டம்.

*வினா எண் 183— திரு. ஆர். மணிமாறன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் பேருந்து நிலையத்தை விரிவாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் என்ில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) ரூ. 36.00 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பூர் நகராட்சி மத்திய பேருந்து நிலையத்திற்கு அபிவிருத்தி பணிகள் செய்யும் திட்டத்திற்கு அரசு 2—12—1982ல் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது.

திரு. ஆர். மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவத் அவர்களே, இந்த விரிவாக்கத் திட்டத்தின் வாயிலாக எவ்வளவு பேருந்துகள் நிற்பதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன? எவ்வளவு கடைகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதலாக 26 பேருந்துகள் நிற்பதற்கும், 33 கடைகள் கட்டுவதற்கும் இந்தத் திட்டம்.

திரு. ஆர் மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது இரண்டாவது விரிவாக்கத் திட்டம். மூன்றாவது விரிவாகத் திட்டத்திற்கான தாக்கீதுகளை நகராட்சி மன்றம் அரசிற்கு அனுப்பி உள்ளதா? இதற்காக அரசு எவ்வளவு தொகை செலவிட உத்தேசித்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது கட்டத்திற்கு ரூபாய் 36 லட்சம்; மூன்றாவது கட்டத்திற்கு ஏறத்தாழ ரூபாய் 42 லட்சம் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் மருத்துவப் பல்கலைக்கழகம் அமைக்கும் திட்டம்.

* வினா எண் 184— திரு. இரா. தாமரைக்கனி: திரு. வேடச்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன், திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் மருத்துவப் பல்கலைக் கழகம் அமைக்கும் உத்தேசம் உள்ளதா?